மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஓர் ஒப்பிட்டு ஆய்வு

# Compare the Hospitality Found in the Aatrupadai Texts with the Hospitality of Today

வைஷ்ணவி மாதவன்/ Vaishnahvi Mathavan[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: 1810vaishu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் ஆற்றப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஒப்பிட்டு ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் ஆய்வு முறையில் அமைகிறது. ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளதால் இதில் ஒப்பாய்வு முறையும் கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வு நூலாய்வு அணுகுமுறையில் கையாளப்பட்டுள்ளன. இவ்வாய்வில் சங்க கால விருந்தோம்பல் தொடங்கி இன்றயை விருந்தோம்பல் வரை ஒப்பிட்டு அடையாளம் காணப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி, இளைய தலைமுறையினர் பண்டைய தமிழர்கள் விருந்தோம்பும் பண்பை எவ்வாறு மதித்துப் போற்றினர் என்றும் பண்டைத்தமிழரின் உணவு முறைகள் ஆகியவை அறிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** சங்க காலம், ஆற்றுப்படை, விருந்தோம்பல், பண்டை தமிழர், உணவு, பண்பு

**Abstract**

The main purpose of this study is to compare the hospitality found in the aatrupadai texts with the hospitality of today. This study is based on the characteristic study method. The comparison method is also handled as the hospitality found in the Aatrupadai texts has been examined in comparison with today's hospitality situation. In this review the hospitality of the Sangam period has been identified by comparing the hospitality of today. Through this study, the younger generation will have the opportunity to learn about how the ancient Tamils valued hospitality and the ancient Tamil cuisine. The researcher confirms that this is the first article in the series to compare the hospitality found in Aatrupadai texts with today's hospitality.
**Keywords:** Sangam period, Aatrupadai, hospitality, ancient Tamils, food, character

**முன்னுரை**

சங்க இலக்கியம் எனப்படுவது கி.மு 500 முதல் கி.பி 200 வரை உள்ள காலப்பகுதியில் எழுதப்பட்டவை எனக் கருதப்படுகிறது. அதுமட்டுமின்றி, சங்க இலக்கியம் தற்போது கண்டுபிடிக்கப்பட்ட வரை 473 புலவர்களால் எழுதப்பட்டு, சுமார் 2381 பாடல்களைக் கொண்டுள்ளது எனவும் கருதப்படுகிறது. மேலும், பெரும்பாலான பாடல்கள், பல்வேறு இடங்களிலும், காலங்களிலும் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும் எனவும் கருதப்படுகிறது. சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இருவகையாகப் பிரிக்கப்படுள்ளது. எட்டுத்தொகையில் எட்டு நூல்களும் பத்துப் பாட்டில் பத்து நூல்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

ஆற்றுப்படை நூல் என்பது தமிழ் இலக்கிய வகையில் ஒன்றாகும். ஆற்றுப்படை என்பது ஒன்றை வழிப்படுத்தல் அல்லது வழிகாட்டுதல் எனக் குறிப்பிடலாம். சான்றாக, பரிசு பெற்ற பாணர் முதலியோர் என்பவர் தாம் பெற்ற பெரும் செல்வத்தைத் தம் இனத்தைச் சார்ந்தவர்க்குத் தம்மைப் போன்று அனைவரும் நல்ல பயன் பெற, தாம் பரிசு பெற்ற வள்ளல் அல்லது அரசனிடம் வழிப்படுத்துவது தான் ஆற்றுப்படை எனக் கூறப்படுகிறது. வள்ளலிடம் பொருள் பெற்றுத் திரும்பும் கலைஞன், வறியவனை நோக்கி, நான் இன்ன பழியாகச் சென்றேன், வள்ளலை அணுகினேன், அவனிடம் இன்ன பரிசிலைப் பெற்றேன், நீயும் அவனிடம் செல். 'பெரும் பரிசினைப் பெற்று மகிழ்'' என்று கூறி அவனை வழிப்படுத்துவான் (ச.சந்திரகலா, 2014). ஆற்றுப்படை நூலுக்குத் தொல்காப்பியம் இலக்கணம் தருகிறது எனலாம். மேலும், பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை எனப்படும் மலைபடுகடாம், கூத்தராற்றுப்படை ஆகிய நூல்கள் ஆற்றுப்படை நூல்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. ஆற்றுப்படை என்ற நூல் பல பண்பாட்டுத் தன்மையுடன் விளங்குகிறது.

தமிழர்களின் பண்பாடுகளில் விருந்தோம்பலை ஒரு முக்கிய அம்சமாகும். விருந்து என்றால் புதுமை, புதியவர் என்று பொருள்படும். நம் வீட்டிற்கு வரும் உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் விருந்தினர் என்கிறோம். ஆனால், அக்கால மக்கள் விருந்தோம்புவதில் விரும்பத்தக்கவர்களாக, முன் அறியாதவர்களையும், உறவுகளையும் அகமும், முகமும் மலர வரவேற்று விருந்தோம்பினர் (முனைவர் க.கிருஷ்ணவேணி, 2020). இவர்களுக்கு விருந்தோம்பல் செய்வதற்குப் பெரிய அளவில் பணம் தேவை இல்லை, நல்ல மனம்தான் தேவை என்று அன்றே கூறியுள்ளார்கள் நம் முன்னோர்கள். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் தம்மை நாடி வருபவர்களுக்கு இரவு, பகல் பாராமல் உணவு பரிமாறி மகிழ்ந்தார்கள். இவ்வாறுதான் நாம் அன்பாகவும் பொருமையாகவும் விருந்தாளிகளைக் கவனிக்க வேண்டும் என்பது அன்றே நம் பண்பாட்டில் விதைக்கப்பட்டுள்ளது. ஆகவே, இந்த ஆய்வுக் கட்டுரையில் ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஒப்பிட்டுச் செய்வதற்காக மேற்கொள்ளபட்டுள்ளது.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்வாய்வு, பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் விருந்தோம்பலை இன்றைய விருந்தோம்பல் நிலையுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளதால் இதில் ஒப்பாய்வு முறையும் கையாளப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வு நூலாய்வு அணுகுமுறையிலும் கையாளப்பட்டுள்ளன.

**ஆய்வுக் கண்டுபிடிப்பு**

**பொருநராற்றுப்படை**

பத்துப்பாட்டினுள் இரண்டாவது நூலாகத் திகழ்வது பொருநராற்றுப்படை ஆகும். இதில் ஒரு பொருநன் மற்றொரு பொருநனை ஆற்றுப்படுத்தினமையால் இது பொருநராற்றுப்படை என அழைக்கப்படுகிறது (முனைவர் பா.நிலாவதி, 2014). பொருநராற்றுப்படை என்ற ஆற்றுப்படை நூல் கரிகால் வளவன் என்கிற சோழ மன்னனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு இயற்றப்பட்டதாகும். பாடியோர் முடத்தாமக்கண்ணியார் என்னும் பெண்பாற்புலவர் ஆவார். மேலும், இவைப் போர்க்களம் பாடும் பொருநரைப் பற்றிக் கூறும் புறத்திணை நூல் எனக் குறிப்பிடப்படுகிறது. அதோடு, இவர் இந்த ஆற்றுப்படையில் பொருநரின் வறுமை, மன்னனின் விருந்தோம்பல், சோழ நாட்டின் வளம், அம்மக்களின் விருந்தோம்பல், கொடை, வீரம் போன்ற பல செய்திகளை உணர்த்தியுள்ளார்.

**மன்னனின் விருந்தோம்பல்**

கரிகால் பெருவளத்தான் என்பவர் விருந்தோம்புவதில் பெரும் வல்லவன் என்று குறிப்பிடப்படுகிறது. பல நாட்கள் பசியால் வாடி சோர்ந்து வரும் பொருநனைத் தன்னுடைய விருந்தினர் என்று மதித்துப் போற்றி அவர்களின் வயிறு நிறைந்து, போதும் போதும் என்று சொல்லும் அளவிற்கு விருந்தோம்பல் அளித்தார். அதுமட்டுமின்றி, பொருநன் வழிநடை வருத்தம் அனைத்தும் முழுமையாகப் போகும்படி நிறையப் பருகினான் என்றும் குறிப்பிடப்படுகிறது. கள்ளின் செருக்கால் உண்டான மெய்யின் நடுக்கம் போக்குவதற்கு எந்த மனக்கவலையும் இல்லாமல் துன்பத்திலிருந்து எழுந்தான். இதனால், கள்ளின் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கினான் எனக் குறிப்பிடப்படுகிறது. பொருநனுக்கு மனமகிழ்ச்சியை வழங்கிய கரிகால் பெருவளத்தானின் விருந்தோம்பல் பண்பை

“போக்கில் பொலங்கல நிறையப் பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட
ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை’
(பொருநராற்றுப்படை , 86 - 89)

என்ற பாடலடிகள் சான்றாக விளங்குகிறது.

மேலும், அக்காலத்தில் மன்னர்கள் விருந்தோம்பல் செய்வதில் ஆர்வம் உள்ளவர்களாக விளங்கினார்கள் என்று அறிய முடிகிறது. அதிலும் இவர்கள் எளிய உணவை மட்டும் வழங்காமல் சுவையான உணவுகளை வழங்கினார்கள். ஆனால், இக்காலத்தில் மன்னர்கள் விருந்தோம்பல் செய்வதில் ஆர்வம் இல்லாமல் இருந்தாலும் பிரதமராலும் குடியரசுத் தலைவராலும் இக்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது எனலாம். பண்டிகை சமயத்தில் பொது மக்களுக்கு அரச விருந்து இன்றும் இருக்கிறது. இதற்கு உதாரணமாக, வாரணாசியில் பிரதமர் மோடி தீபாவளி விருந்து ஒன்றை நடத்தினார். இந்த நிகழ்ச்சிக்கு 'தீப உற்சாகம், மோடிஜியுடன் தொண்டர்கள் விருந்து' என்று பெயரிடப்பட்டுள்ளது (தினமலர், 2019). மேலும், டோக்கியோ ஒலிம்பிக் 2020-இல் பங்கு கொண்ட இந்திய அணியினருக்குக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தேநீர் விருந்து அளித்தார் (ஜீ ஹிந்துஸ்தான் தமிழ், 2021). இதன்வழி, விருந்தோம்பும் பண்பு இவர்களில் இன்னும் இருக்கின்றது என்பதை அறியலாம்.

**வழியனுப்பும் மன்னனின் செயல்**

அடுத்தாக, பண்டைய தமிழர்கள் உற்ற நண்பர்கள், உயர்ந்தோர்கள், மூத்தோர்கள் போன்றவர்களை வரவேற்கும் சமயத்திலும் வழியனுப்பும் சமயத்திலும், விருந்தினர் எதிர்ச் சென்று வரவேற்றலையும் பின் சென்று வழிவிடுதலையும் ஒரு பண்பாகக் கொண்டிருந்தனர். தொடர்ந்து, கரிகால் பெருவளத்தான் அதே போல் வரவேற்றுப் பின்பு அவர்களை உபசரித்தும், அன்பாக வழியனுப்பியும் வாழ்ந்துள்ளார் எனக் கருதப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக, பெருநராற்றுப்படையில்,

"காலின் ஏழ்அடிப் பின் சென்று கோலின்
தாறுகளைந்து ஏறுஎன்று ஏற்றி"
(பெருநராற்றுப்படை, 51)

எனும் வரி குறிப்பிடுகிறது. இதனுடைய விளக்கம் என்னவென்றால், மன்னன் கரிகாலன் என்பவர், தன்னிடம் பரிசில் பெற்றுச் செல்லும் பாணர்களை முழுமையாக மதித்து, பண்போடு, ஏழடி பின் நின்று வழியனுப்பிய செய்தி குறிப்பிடப்படுகிறது.

இதுமட்டுமின்றி, இந்த பண்பாடு இக்காலத்திலும் தமிழர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். தன் வீடு தேடி வரும் விருந்தினர் வரவேற்கும் போது ஏழடி எதிர் சென்று வரவேற்றலும் அதன் பின்னர் அவர்களுக்கு விருந்தோம்பல் அளித்து, புறப்படும் வேளையில் ஏழடி பின் சென்று வழியனுப்பும் இக்கால மக்களிடத்தும் அதிகமாக அறிய முடிகிறது எனலாம். சான்றாக, தன் இல்லம் தேடி வந்தவரை அவன் மரியாதையுடன் ஏழடி எதிர் சென்று புன்னகையுடன் வரவேற்றான் அவன் (காயத்ரி, 2017). இந்த வழக்கத்தை 'ஏழடி' மரியாதை என்றும் குறிப்பிடலாம்.

**பாணாற்றுப்படை**

அடுத்ததாக, பாணாற்றுப்படை என்பது ஆற்றுப்படை நூலில் ஒன்றாகும். பாணன் என்பவர் யாழிசை வாணன் ஆவார். இப்பாடல்கள் பாணன் ஒருவனைப் பரிசில் பெறச் செல்ல வழிப்படுத்திப் பாடப்படுவதாகும். வறுமையில் வாடும் பாணனை ஆற்றுப்படுத்துவதாக எட்டுப் பாடல்கள் சங்கப் பாடல் தொகுப்பில் உள்ளன. அதில் பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுபடை என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பாணாற்றுப்படையில் வறுமையில் விருந்து உபசரிப்பு, எயிற்பட்டின விருந்து, உழவர்களின் விருந்தோம்பல் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து. சிறுபாணாற்றுப்படையிலும், பெரும்பாணாற்றுபடையிலும் பெண்கள் விருந்தோம்பலில் சிறந்தவர்களாக விளங்கியதைச் சுட்டப்பட்டுள்ளது.

**i. வறுமையில் விருந்து உபசரிப்பு**

பண்டைக் காலத்தில் வள்ளல்களும் கொடையாளிகளும் வாழ்ந்த காலத்தில் தமிழர்கள் பலர் வறுமையில் வாடினார்கள் என்பது உண்மையாகும். பலர் உண்ணுவதற்கு ஒன்றும் இல்லாமல் தவித்தனர். இந்த வறுமையிலும் தன்னையோ தன் குடும்பத்தையோ மற்றவர்கள் ஏளனம் செய்யக்கூடாது என்பதில் அக்காலப் பெண்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள் என்று சிறுபாணாற்றுப்படை எடுத்துரைக்கிறது. சான்றாக சிறுபாணாற்றுப்படையில்,

“ஒல்கு பசி உழந்த ஒடுங்குநூண் மருங்கல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர் குறைத்த
குப்பை வேளை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்து”
(சிறுபாணாற்றுப்படை 135 - 138)

எனும் வரி உணர்த்துகிறது. இதனுடைய விளக்கம் என்னவென்றால், வறுமையின் பசியில் மெலிந்த உடலையும் நுண்ணிய இடையையும் உடைய கிணைமகள் தன்னுடைய வளைந்த கை நகங்களால் குப்பையில் முளைத்திருந்த வேளைக் கீரையைக் கிள்ளி, உப்புக்கூட இல்லாமல் அதனை வேகவைத்து உண்டார் என்பதாகும். இப்படி உண்ணுகிறார்களே என்று யாரும் ஏளனம் செய்யக் கூடாது என்பதை எண்ணி உண்டார்கள். வறுமையிலும் விருந்து என்பது போல, தன் குடும்ப வறுமை வெளியில் எவருக்கும் தெரியாதவாறு வீட்டுக் கதவை மூடி உண்டார்கள். இது போன்ற வறுமையிலும் அக்காலத்தில் விருந்தோம்பல் நடத்தினர் என்பதைத் தெளிவாகக் காண முடிகிறது.

மேலும், இக்காலத்தில் வறுமையில் உள்ளவர்களின் இல்லம் தேடி ஆட்கள் வந்தால் பெரிய அளவில் சிறப்பான விருந்தோம்பல் செய்ய முடியாவிட்டாலும், தன்னால் முடிந்த அளவிற்குப் பருகுவதற்கு நீரும், பசி தீர்ப்பதற்குக் கொஞ்சம் உணவும் அளித்து மனம் மகிழ்வார்கள். எடுத்துக்காட்டாக, ஆடம்பர விருந்து செய்வது விருந்தோம்பல் என்ற

கணக்கில் வராது என்கிறார் (விகடபாரதி, 2018). ஆக, வறுமையில் இருந்தாலும் பசி என்று இல்லம் தேடி வந்தால் தன்னால் முடிந்தவற்றை விருந்து அளிப்பதுதான் வறுமையில் வாழும் இன்றைய மனிதர்களின் குணமாகும். வறுமையில் விருந்து என்பது இன்றும் நம்மால் வறுமையில் உள்ளவர்களிடம் காண முடிகிறது எனலாம்.

**எயிற்பட்டின விருந்து**

பரிசில் பெற்ற பாணன், பரிசில் பெறவிருக்கும் பாணனுக்கும் வழிகளைச் சொல்லி ஆற்றுப்படுத்தும் சமயத்தில் பல ஊர்களின் பெருமையைக் கூறப்படுகிறது. மேலும், பரதவர் வாழ்க்கை முழுவதும் கடலோடு தொடர்புடையதாகும். பரதவர் மீன் பிடித்தலோடு உப்பு விளைத்தல், முத்தெடுத்தல் போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளனர் எனக் கருதப்படுகிறது. நுளையர் மகளிர் காய்ச்சி அரித்த தேறலையும் உலர்ந்த குழல் மீனையும் எப்பொழுதும் தம் இல்லங்களில் வைத்து உண்பார்கள். அதையும் வரும் விருந்தினருக்கு உணவாகக் கொடுப்பார்கள். அதன் பின்னர், அனைவரும் ஒன்று இணைந்து ஆடுவார்கள். அவ்வேளையில் பரதவரும் அவரின் மனைவியும் மீதம் இருக்கும் மீன்களைக் காய வைத்து உண்டு மகிழ்வர்கள். குறிப்பாக, இதில் கணவனும் மனைவியும் இணைந்து உணவு படைக்கும் திறம் விளக்கப்படுகிறது. சான்றாக,

> "நுதிவேல் நோக்கின் நூளைமகள் அரித்த
> பழம்படு தேறல் பரதவர் மடுப்பக்
> கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
> தளைஅவிழ் தெரியல் தகையோற் பாடி
> அறல்குழல் சூட்டின் வயின் வயின் பெறுகுவிர்"
> (சிறுபாண்ணாற்றுப்படை 158 - 163)

எனும் வரியின் வழி மிக விளக்கமாக அறிய முடிகிறது. தொடர்ந்து, கணவனும் மனைவியுமாகிய இருவரும் இணைந்து வழி நடத்தும் குடும்ப வாழ்வில் தன் இல்லத்திற்கு வரும் நண்பர்களையும் உறவினர்களையும் இன்முகத்துடன் இனிதே இருவரும் வரவேற்று உபசரிப்பது வழக்கமாகும்.

இன்றைய காலத்தில் கணவன் மனைவி அவ்வாறு ஒற்றுமையாக இல்லை எனக் குறிப்பிடலாம். நன்கு அறிமுகமான உறவினர்களோ, நண்பர்களோ இல்லத்திற்குச் சென்றால் அனைவரும் ஒற்றுமையாக வரவேற்கும் பண்பினைக் காண்பது அரிதாகி விட்டது. கணவரின் உறவு அல்லது அவரின் நண்பர் வந்தால் கூட மனைவி வரவேற்பது கடினமாகி விட்டது எனலாம். அக்காலத்தில் பெண்கள்தான் சமையலை விரும்பி செய்வார்கள் ஆனால் இன்று அப்படி இல்லை. பெண்கல்வி ஏற்றத்தால் ஆண்களைப் போல் பெண்களும் பணிபுரியும் நிலை உருவாகி விட்டது. ஆகையால், நேரமின்மை காரணத்தினால்தான் சமைப்பதை விட, உடனே உணவுகளை உணவு விடுதிகளில் வாங்கி, வரும் விருந்தினருக்கு விருந்தோம்பும் வழக்கம் மிகுந்து வருகிறது. அதிலும் சில மனைவிகள் விருந்தினர் வந்துவிட்டால் சிடுசிடுவென்று முகத்தை மாற்றி விருப்பம் இல்லாத போல்

உரையாடுவார்கள். இதற்கு உதாரணமாக, மனைவிக்குச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், கணவனுக்குச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சுற்றத்தாரை நேசிப்பது ஒவ்வொரு மனைவியின் பண்பாக அமைய வேண்டும். சில மனைவிமார்கள் தமக்கு வேண்டிய சுற்றத்தாரை மட்டும் நேசிப்பதும், கணவனுக்கு வேண்டிய சுற்றத்தாரைப் புறக்கணித்து அலட்சியப்படுத்தும் குணம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். சுற்றத்தார் நேசிப்பவர்க்கு நல்ல மனமும் பெருந்தன்மையும் வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார் (திருகவி, 2020). எனவே, இதன் வழி விருந்தோம்பும் பண்பு குறைந்து விட்டது என்பதை நம்மால் அறிய முடிகிறது.

**உழவர்களின் விருந்தோம்பல்**

பாணனை ஆற்றுப்படுத்தும் வேளையில், நல்லியக்கோடன் அரண்மனைக்குச் செல்லும் வழிகளின் இடையில் பல ஊர்கள் அமைந்துள்ள வரிசையில் ஆமூர் என்ற நகரத்தின் சிறப்புக் கூறப்படுகிறது. மேலும், ஆமூர் வளத்தை எடுத்தியம்பிய புலவர், அந்த நகருக்குச் சென்றால் அங்கு வசிக்கும் உழவரின் விருந்தோம்பல் சிறப்பினையும் குறிப்பிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது. ஆமூர் எனும் நகரத்தில் இருக்கும் அவர்களின் எருதுகள் பாரம் தாங்கி இழுக்கும் வல்லமை பெற்றவையாகும். ஆகையால், இது போன்ற எருதுகளைப் பயன்படுத்தி உழவர்கள் நிலத்தை உழுவார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. உழவனின் தங்கை தன் தலைமுடியைப் பின்னி முதுகு புறமாகத் தொங்கவிடுவார்கள். அது பார்ப்பதற்கு யானையின் துதிக்கை போல் இருக்கும் எனக் குறிப்பிடுகிறது. சிறிய முதுகு, தொடியணிந்த கையினையும் உடைய பெண்கள் தங்கள் குழந்தைகளை அனுப்பி, பாணனைத் தடுத்துத் தங்கள் இல்லத்திற்குக் அழைத்து வந்து முறையாக விருந்துப் படைப்பார்கள் எனக் குறிப்பிடப்படுகிறது. இதற்கு எடுத்துக்காட்டாக,

> “உரன்கெழு நோன்பகட் டுழவர் தங்கை
> பிடிக்கை அன்ன பின்னுவீழ் சிறுபுறத்துத்
> தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப”
> (சிறுபாணாற்றுப்படை 190 - 192)

என்ற சிறுபாணாற்றுப்படை வரிகள் வழி உணரமுடிகிறது.

அதுமட்டுமின்றி, இந்தப் பண்பாடு இக்காலத்திலும் உழவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. உழவர்கள் பெரிய விருந்து செய்யவிட்டாலும், தங்களால் முடிந்தவற்றைச் செய்கின்றார்கள். அதுமட்டுமின்றி, சில உழவர்கள் தங்களாகவே விருந்தோம்பல் செய்வதற்கு முன் வருகின்றார்கள் எனக் குறிப்பிடலாம். சான்றாக, “மனோகரன் தற்போது கரூரில் வசித்து வந்தாலும், தனது சொந்த ஊரான வேட்டையார்பாளையத்தில் 6 ஏக்கர் நிலத்தில் இயற்கை வேளாண் பண்ணை வைத்துள்ளார். இங்கு இயற்கை முறையில் விவசாயம் செய்து வருகிறார். பணி ஓய்வுபெற்றபின், தன்னுடன் படித்த மாணவர்களுடன் தொடர்புகொண்டு அவர்களைத் தனது வேளாண் பண்ணைக்கு அழைத்து, கடந்த சில ஆண்டுகளாக முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தி, தங்களுக்குக் கல்வி

கற்பித்த ஆசிரியர்களை அழைத்துக் கவுரவிக்க வேண்டும் என மனோகரன் மற்றும் அவரது பள்ளித் தோழர்கள் முடிவு செய்தனர். நிகழ்ச்சிக்குப் பின் ஆசிரியர்களுக்கு அசைவம், சைவம் என விருந்து வைத்து உபசரித்தார் மனோகரன் (இந்து தமிழ் திசை, 2021). ஆக, இதன்வழி ஓர் உழவன் தன் நண்பர்களுடன் விருந்தோம்பல் அளித்தார்கள் என்பதை நன்கு அறிய முடிகிறது.

**நிறைவுரை**

ஆற்றுப்படை இலக்கியங்களில் காணலாகும் விருந்தோம்பல் எனும் கூற்றின்வழி பண்டைத்தமிழரின் உணவு முறைகள் குறித்த செய்திகள் பதிவு செய்யப்படுவதையும் இதன்வழி அறிந்து கொள்ள முடிகின்றது. இத்தனை பெருமைகள் உடைய இனத்தில் பிறந்த நாம் பெருமைக்குரியவர்கள் எனக் கூறலாம். நம்முடைய பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் என்றைக்கும் அழியதாவை என்று சொல்லி, இவற்றை நாமும் பின்பன்றி, அடுத்து வரும் தலைமுறையினருக்கும் கற்றுத்தந்து வாழ்வதே சிறப்பாகும்.

**துணைநூற்பட்டியல்**


செல்வம், (2019, ஜனவரி 4). “46 ஆண்டுகளுக்கு முன் கல்வி கற்பித்த பள்ளி ஆசிரியர்களை கவுரவித்து விருந்து- நெகிழவைத்த முன்னாள் மாணவர்களின் குருபக்தி”. https://www.hindutamil.in/news/tamilnadu/152443-46.html.

சேதுராமன், பி. (2013, பிப்ரவரி 10). “ஆற்றுப்படை இலக்கியத்தில் தமிழர்வாழ்வியல்”.https://www.dinamani.com/specials/noolaragam/2013/feb/10/%html.

தமிழ்களஞ்சியம், (2021, நவம்பர்28), ”பொருநராற்றுப்படை பத்துப்பாட்டு”. http://www.tamilsurangam.in/literatures/patthu_paddu/porunaratrupadai.html.

துளிர், (2020, ஆகஸ்டு 02). “குடும்பத்தில் விருந்தோம்பல் மற்றும் சகிப்புத் தன்மையின் முக்கியத்துவங்கள்”. https://www.thulirkalvi.net/2020/08/blog-post_2.html?m=1.

மணி, (2019, ஆகஸ்டு 24). “வாரணாசியில் பிரதமர் மோடி தீபாவளி விருந்து”.https://www.dinamalar.com/news_detail.asp?id=2396214. தினமலர்.

மாலதி தமிழ்செல்வன், (2021, ஆகஸ்டு 10). “டோக்கியோ ஒலிம்பிக் வீரர்களுக்கு விருந்து கொடுக்கிறார் குடியரசுத் தலைவர்”. https://zeenews.india.com/tamil/lifestyle/president-ram-nath-kovind-to-host-high-tea-to-indian-olympic-contingent-what-is-high-tea-368145.

விகடபாரதி, (2018, மார்ச் 20). “வறுமையை விரட்ட விருந்தோம்பு”.https://vikatabharathi.blogspot.com/2018/03/blog-post_69.html.